கள்ளக்குறிச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திரு.பொ.அசோக்குமார்,பி.எஸ்ஸி(விவ).,எம்.பி.ஏ.,

செ.மு.ஆ.எண்:அ3/9885/2024(1) நாள்:09.09.2024.

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் 2022–ஆம் ஆண்டு தொகுதி IV நேரடி போட்டி தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர் (பி) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்டது – திரு.B.கிரி, இளநிலை உதவியாளர் (பி) ஆக 27.12.2023 முற்பகல் பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை:
1) சென்னை, வேளாண்மை ஆணையர் அலுவலக கூடுதல் இயக்குநர் (பணிமேலாண்மை) அவர்களின் செ.மு.ஆணை எண்:அநிபி5/97025/2023–2, நாள்:08.12.2023.
2) வேளாண்மை இணை இயக்குநர் கள்ளக்குறிச்சி அவர்களின் செ.மு. ஆணை எண்:அ3/9885/2023(2), நாள்:13.12.2023.

–––––––

ஆணை:

பார்வை (1) மற்றும் (2)–ல் காணும் செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2022 ஆம் ஆண்டு நேரடி போட்டித் தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர் (பி)–ஆக தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்ட திரு.B.கிரி அவர்கள் 27.12.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பி)–ஆக வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், திருநாவலூர் கட்டுப்பாட்டில் உள்ள துணை வேளாண்மை விரிவாக்க மையம் சேந்தநாடு அலுவலகத்தில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (1)–ல் காணும் செயல்முறை ஆணையில் வழங்கியுள்ள அறிவுரைகளின் படி இவரது பணி இளநிலை உதவியாளர் (பி) பதவியில் 27.12.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

மேலும் வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி கீழ்காணும் பத்தியில் குறிப்பிட்டுள்ளவைக்கு உட்பட்டு இவருக்கு இளநிலை உதவியாளர் (பி) பதவியில் பணிவரன்முறை செய்யப்படுகிறது.

"This regularisation is subject to the outcome of the W.P's pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of Hon'ble High court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination -Group-IV''.

......2

இப்பணியாளர் பணிவரன்முறை செய்த நாளில் இருந்து மூன்றாண்டு கால தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தினராக இருக்க ஆணையிடப்படுகிறது.

தகுதிகாண் பருவ காலத்திற்குள் இவர் பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர்/ உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினை முடித்து தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், மேற்கண்ட பயிற்சி/ தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற பிறகுதான் இவருக்கு தகுதிகாண் பருவம் முடித்திட தகுதியுடையவராவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வேளாண்மை இணை இயக்குநர்
கள்ளக்குறிச்சி

9/9/24

பெறுநர்:

திரு.B.கிரி,
இளநிலை உதவியாளர் (பி),
துணை வேளாண்மை விரிவாக்க மையம், சேந்தநாடு,
வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம்,
திருநாவலூர்.

வழி மற்றும் நகல்: வேளாண்மை உதவி இயக்குநர், திருநாவலூர்.

நகல்: வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: பணிப்பதிவேட்டிற்கு

நகல்: இருப்புக் கோப்பிற்கு

உபரி: 1